உ

கணபதி துணை.

கந்தரனுபூதி மூலபாடம்.

சுப்பிரமணியசுவாமி
வரப்பிரசாதியாய்த்
திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த

அருணகிரிநாதர்

அருளிச்செய்தது.

இஃது - ஆதம்பாக்கம்
இராமசாமி முதலியாரால்
பார்வையிடப்பட்டு.
திருமயிலை
வீராசாமிமுதலியாரால்
தேசாபிமானி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

குரோதிஞு பங்குனிமீ
இதன் விலை - அணா - உ.
இஃது
ஸ்ரீ-புண்ணியகோட்டி நாயகரால்
அச்சடுக்கப்பட்டது.

உ

கணபதி துணை.

கந்தரனுபூதி.

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்.... *
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர். . .*
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே.... *
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்... ...*

ஆடும் பரிவே லணிசே வலெனப்.........*
பாடும் பணியே பணியா வருள்வாய்....*
தேடுங் கயமா முகனைச் செருவிற்.......*
சாடுந் தனியா னைசகோ தரனே......(க)

உல்லா சனிரா குலயோ கவிதச். ... ..*
சல்லா பவினோ தனுநீ யலையோ.........*
வெல்லா மறவென்னை யிழந்த நலஞ்....*
சொல்லாய் முருகா சுரபூ பதியே.....(உ)

வானோ புனல்பார் கனல்மா ருதமோ. ..*
ஞானோ தயமோ நவினான் மறையோ....*
யானோ மனமோ வெனையாண் டவிடந்.....*
தானோ பொருளா வதுசண் முகனே...(ங)

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்.... *
தளைபட் டழியத் தகுமோ தகுமோ.....*
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்........*
தொளைபட் டுருவத் தொடுவே லவனே...(ச)

மகமா யைகளைந் திடவல் லபிரான்.....*
முகமா று மொழிந் துமொழிந் திலனே..*
யகமா டைமடந் தையரொன் றயருஞ்....*
சகமா யையுணின் றுதயங் குவதே....(௫)

திணியா னமனோ சிலைமீ துனதா......*
ளணியா ரரவிந் தமரும் புமதோ.......*
பணியா வெனவள் ளிபதம் பணியுந்.. ...*
தணியா வதிமோ கதயா பரனே.......(௬)

கெடுவாய் மனனே கதிகேள் கரவா......*
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்...*
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே....*
விடுவாய் விடுவாய் வினையா வையுமே..(௭)

அமரும் பதிகே ளகமா மெனுமிப்.......*
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா *
குமரன் கிரிரா சகுமா ரிமகன்.... ... ...*
சமரம் பொருதா னவநா சகனே..........(அ)

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப் ..*
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்....*
றட்டூ ட்றவேல் சைலத் தெறியு.. ....*
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே..........(௯)

கார்மா மிசைக்கா லன்வரிற் கலபத்......*
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்.....*
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ் ....*
சூர்மா மடியத் தொடுவே லவனே.... (௰)

கூகா வெனவென் கிளைகூ டியழப்......*
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா *
நாகா சலவே லவநா லுகவித்.........*
தியாகா சுரலோ கசிகா மணியே........(௰௧)

செம்மான் மகளைத் திருடுந் திருடன்....*
பெம்மான் முருகன் பிறவா னிறவான்..*
சும்மா விருசொல் லறவென் றலுமே....*
யம்மா பொருளொன் றுமறிந் திலனே(௰௨)

முருகன் றனிவேன் முனிநங்குருவென்...*
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ......*
வுருவன் றருவன் றுளதன் றிலதன்........*
றிருளன் றொளியன் றெனநின் றதுவே(௰௩)

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்..*
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்.*
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியா..*
மைவாய் வழிசெல் லுமவா வினையே(௰௪)

முருகன் குமரன் குகனென் றுமொழிந்..*
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்*
பொருபுங் கவரும் புவியும் பரவுங்......*
குருபுங் கவவெண் குணபஞ் சரனே...(௰௫)

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்...*
டோரா வினையே னுழலத் தகுமோ......*
வீரா முதுசூர் படவே லெறியுஞ்........*
சூரா சுரலோ கதுரந் தரனே........(௰௬)

யாமோ தியகல் வியுமெம் மறிவுந் ..... ※
தாமே பெறவே லவர்தந் ததனாற் .... ※
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர் .. ※
நாமே னடவீர் நடவீ ரினியே .... (௰௭)

உதியா மரியா வுணரா மறவா .... ※
விதிமா லறியா விமலன் புதல்வா .... ※
வதிகா வனகா வபயா வமரா .... ※
வதிகா வலசூ ரபயங் கரனே .... (௰௮)

வடிவுந் தனமு மனமுங் குணமுங் .... ※
குடியுங் குலமுங் குடிபோ கியவா .... ※
வடியந் தமிலா வயில்வே லரசே .... ※
மிடியென் றொருபா விவெளிப் படினே (௰௯)

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியே ..... ※
னுரிதா வுபதே சமுணர்த் தியவா .... ※
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர் ...... ※
புரிதா ரகநாக புரந் தரனே .... (௨௰)

கருதா மறவா நெறிகா ணவெனக் .... ※
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய் ..... ※
வரதா முருகா மயில்வா கனனே .... ※
விரதா சுரசூ ரவிபா டணனே .... (௨௰௧)

காளைக் குமரே சனெனக் கருதித் .... ※
தாளைப் பணியத் தவமெய் தியவா ...... ※
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும் .... ※
வேளைச் சுரபூ பதிமே ருவையே ...... (௨௰௨)

அடியைக் குறியா தறியா மையினுன்.....✻
முடியக் கெடவோ முறையோ முறையோ.✻
வடிவிக் ரமவேள் மகிபா குறமின்........✻
கொடியைப் புணருங் குணபூ தரனே...(உ௩)

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே...✻
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ..✻
சூர்வே ரொடுகுன் றுதுளைத் தநெடும்..✻
போர்வே லபுரந் தரபூ பதியே......(உ௪)

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந் ✻
தையோ வடியே னலையத் தகுமோ.....✻
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்.....✻
செய்யோய் மயிலே றியசேவகனே...(உ௫)

ஆதா ரமிலேனருளைப் பெறவே........✻
நீதா னொருசற் றுநினைந் திலையே......✻
வேதா கமஞா னவினோ தமனோ.:. .....✻
சீதா சுரலோ கசிகா மணியே......(உ௬)

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயா....✻
னென்னே விதியின் பயனிங் கிதுவோ....✻
பொன்னே மணியே பொருளே யருளே!.✻
மன்னே மயிலே றியவா னவனே....(உ௭)

ஆனா வமுதே யயில்வே லரசே........✻
ஞானா கரனே நவிலத் தகுமோ..........✻
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்.......✻
தானாய் நிலைநின் றதுதற் பரமே....(உ௮)

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ.....*
பொல்லே னறியா மைபொறுத் திலையே *
மல்லே புரிபன் னிருவா குவிலென்......*
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே (௨௯)

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்.....*
றொவ்வா ததென வுணர்வித் ததுதா......*
னவ்வா றறிவா ரறிகின் றதலா.........*
லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. (௩௰)

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே..*
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே..*
தாழ்வா னவைசெய் தனதா முளவோ..*
வாழ்வா யினிநீ மயில்வா கனனே ....(௩௧)

கலையே பதறிக் கதறித் தலையூ........*
டலையே படுமா றதுவாய் விடவோ....*
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்..*
மலையே மலைகூ றிடுவா கையனே..(௩௨)

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்..*
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்..*
மந்தா கினிதந் தவரோ தயனே........*
கந்தா முருகா கருணா கரனே......(௩௩)

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்....*
மங்கா மலெனக் குவரந் தருவாய்... ..*
சங்க்ரா மசிகா வலசண் முகனே........*
கங்கா நதிபா லக்ருபா கரனே....(௩௪)

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்..*
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்....*
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்..*
றுதியா விரதா சுரபூ பதியே......(௩௫)

நாதா குமரா நமவென் றரனா..........*
ரோதா யெனவோ தியதெப் பொருடான்..*
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்...*
பாதா குறமின் பதசே கரனே......(௩௬)

கிரிவாய் விடுவிக் ரமவே லிமையோர்....*
பரிவா ரமெனும்பதமே வலையே........*
புரிவாய் மனனே பொறையா மறிவா....*
லரிவா யடியோ டுகமந் தையையே..(௩௭)

ஆதா ளியையொன் றறியே னையறத்....*
தீதா ளியையாண் டதுசெப் புமதோ....*
கூதா ளகிரா தகுலிக் கிறைவா.......*
வேதா ளகணம் புகழ்வே லவனே....(௩௮)

மாவேழ் சனனங் கெடமா யைவிடா....*
மூவே டணையென் றுமுடிந் திடுமோ....*
கோவே குறமின் கொடிதோள் புணருந்..*
தேவே சிவசங் கரதேசிகனே........(௩௯)

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்..*
மனையோ டுதியங் கிமயங் கிடவோ......*
சுனையோ டருவித் துறையோ டுபசுந்....*
தினையோ டிதணோ டுதிரிந் தவனே..(௪௰)

சாகா தெனையே சரணங் களிலே........*
காகா நமனர் கலகஞ் செயுநாள்........*
வாகா முருகா மயில்வா கனனே........*
யோகா சிவஞா னொபதே சிகனே....(சக)

குறியைக் குறியா துகுறித் தறியு......*
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்...*
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்...*
றறிவற் றறியா மையுமற் றதுவே....(சஉ)

தாசா மணியுந் துகிலும் புனைவா......*
னேசா முருகா நினதன் பருளா........*
லாசா நிகளந் துகளா யினபின்........*
பேசா வனுபூ திபிறந் ததுவே......(சங)

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்......*
சூடும் படிதந் ததுசொல் லுமதோ......*
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்....*
காடும் புனமுங் கமழுங் கழலே......(சச)

கரவா கியகல் வியுளார் கடைசென்......*
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ*
குரவா குமரா குலிசா யுதகுஞ்.........*
சரவா சிவயோ கதயா பரனே.......(சரு)

எந்தா யுமெனக் கருடந் தையுநீ....... *
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்....*
கந்தா கதிர்வே லவனே யுமையாண்......*
மைந்தா குமரா மறைநா யகனே....(சசா)

ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்....*
பேறு வடியேன் பெறுமா றுளதோ....*
சீறு வருசூர் சிதைவித் திமையோர்......*
கூறு வுலகங் குளிர்வித் தவனே......(சஎ)

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்.....*
பிறிவொன் றறநின் றபிரா னலையோ..*
செறிவொன் றறவந் திருளேசிதைய....*
வெறிவென் றவரோ டுறும்வேலவனே(சஅ)

தன்னந் தனிநின் றதுதா னறிய........*
வின்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ..*
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்....*
கின்னங் களையுங் கிருபைசூழ் சுடரே..(சகூ)

மதிகெட் டறவா டிமயங் கியறக்........*
கதிகெட் டவமே கெடவோ சுடவே......*
னதிபுத் திரஞா னசுகா திபவத்...........*
திதிபுத் திரர்வீ றடுசே வகனே......(ருய)

உருவா யருவா யுளதா யிலதாய்........*
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்*
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்....*
குருவாய் வருவா யருள்வாய் குகனே..(ருக)

கந்தரனுபூதிமுற்றிற்று.

பலழுயபிரதிகளுக்குள்ளே சிலவற்றுள்-சங பாட்டுகளும்சிலவற்றுள்-டுக-பாட்டுகளுமிருக்கிறபடியால், அவ்வேறுபாடுதோன்ற நடுவேகீற்றுவைக்கப்பட்டது.